'முரசு' புயலில் சிக்கி, உயிரிழந்த மற்றும் மாயமான

மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்! நிதியுதவி!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

















சென்னை,நவ.8-

`முரசு' புயலில் சிக்கி, உயிரிழந்த மற்றும் மாயமான சென்னை காசிமேடு, எண்ணூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் இல்லங்களுக்குச் சென்று, அவர்களது குடும்பத்தினரைச் சந்தித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆர்.கே.நகர் தொகுதி, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த குப்புசாமி, ஒத்தவாடை தெருவைச் சேர்ந்த முருகன், பல்லவன் நகர் பகுதியைச் சேர்ந்த குப்பன், காசிமேடு காசிபுரம் பகுதியைச் சேர்ந்த சூர்யா, காசிமேடு N-4 அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த அரவிந்தன், இராயபுரம் தொகுதி காசிமேடு இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்த மோகன், திருவொற்றியூர் தொகுதி திருச்சினாங்குப்பம் மீனவக் குடியிருப்பைச் சேர்ந்த மாயமான ராஜேஷ் மற்றும் எண்ணூர் சுனாமி குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த விஜயகாந்த் ஆகிய எட்டு மீனவர்களின் குடும்பத்தினரையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

உயிரிழந்த மீனவர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தியதுடன், அவர்களின் குடும்பத்தினருக்குக் கழகத்தின் சார்பில் நிதியுதவியும் வழங்கினார். மேலும், இத்துயரமான நேரத்தில் கழகம் அவர்களுக்குத் துணை நிற்கும் என்றும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையிலும் மீனவர்கள் கடலுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு, மீனவர்கள் மாயமானது தொடர்பாக அளிக்கப்பட்ட புகார்களையும் அரசு உரிய முறையில் கவனத்தில் கொள்ளவில்லை என்றும், அரசின் அலட்சியப் போக்கே இந்த உயிரிழப்புகளுக்குக் காரணம் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கண்ணீருடன் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பத்தினரின் கோரிக்கைகள் குறித்து, செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அரசுத் தரப்பில் வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும், மீனவர்களுக்குப் போதிய காப்பீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், `மீனவர்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய அரசு, தனது பொறுப்பை உணர்ந்து புயல் மற்றும் பேரிடர் காலங்களில் உரிய முன்னெச்சரிக்கை, கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அரசின் அலட்சியத்தால், இனி ஒரு மீனவரின் உயிரும் பறிபோகக் கூடாது' என்றும் தெரிவித்தார்.

`பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் நியாயமான கோரிக்கைகளை, அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்' என வலியுறுத்திய அவர், இத்துயரமான சூழலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கழகம் என்றும் உறுதுணையாக நிற்கும் என்றும் உறுதியளித்தார்.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக் கழக நிர்வாகிகளுக்கு சிறப்புப் பரிசுகள்!

மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, நவ.7:

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட கழக நிர்வாகிகளுக்குப் பட்டாசு, இனிப்பு, காரம் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி, நேற்று (07.11.2026, சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநிலக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு



உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக அணிகளின் பகுதி மற்றும் வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.-2, பி.டி.ஏ., பி.ஓய்.ஓ. உள்ளிட்ட கழக நிர்வாகிகளுக்குப் பட்டாசு, இனிப்பு, காரம் மற்றும் சிறப்புப் பரிசுகளை வழங்கி, நல்வாழ்த்துகளைத் தெரிவித்துச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், துறைமுகம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ். முரளி, துறைமுகம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ். இராஜசேகர், 5ஆவது மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, எம். விஜயகுமார், ஜி.எம். தேவன், இசட். ஆசாத் எம்.சி., எம். இப்ராஹிம் கனி, வெ. பரிமளம் எம்.சி., எல். சம்பத்குமார், பா. பிரதீப் குமார், எம். விநாயகம், பி. விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், வட்டக் கழகச் செயலாளர்கள் டி. சதீஷ்குமார், வே.பா. பிரபாகரன், ஜி. ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, மா. ஜெய்சங்கர், பா. கதிரவன், இரா. ரவிச்சந்திரன், எல். சத்தியநாராயணன், எஸ். புகழேந்தி, அஸ்லாம், டி. கதிரவன் என்ற ராஜா, எம். பரத்குமார், கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன், லண்டன் க முருகன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நீதியரசர் குரியன் ஜோசப் குழுவைக் கலைத்தது

மாநில உரிமைகளுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி!

பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, நவ. 8-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு, மாநில உரிமைகளையும் உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாக்க உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் அமைத்த உயர்நிலைக் குழுவைத் தற்போதைய தமிழ்நாடு அரசு கலைத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

1969ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழுவுக்குப் பிறகு, மத்திய மாநில அதிகாரப் பகிர்வு, ஆளுநரின் அதிகார



வரம்புகள், கல்வி, நிதி உரிமைகள், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகளை ஆய்வு செய்த வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியாக இக்குழு அமைந்தது.

2026 பிப்ரவரி 16ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்ட முதல் அறிக்கை, ஆளுநரின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பாடு, கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருதல், மாநிலங்களின் நிதி மற்றும் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட முக்கியப் பரிந்துரைகளை முன்வைத்தது.

இந்த அறிக்கையை அன்றைய கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா வரவேற்று, கூட்டுறவுக் கூட்டாட்சி வலுக்கட்டாயமான கூட்டாட்சியாக மாறிவருவதாக எச்சரித்தார். கட்சி வேறுபாடுகளைக் கடந்து மாநிலங்கள் ஒன்றிணையவும் அழைப்பு விடுத்தார். எனவே, இது தமிழ்நாட்டின் முயற்சியாக மட்டுமின்றி தேசிய அளவிலான கூட்டாட்சிப் பாதுகாப்பு விவாதமாகவும் உருவெடுத்தது.

தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் பணிகளுடன் ஒத்துப்போகிறது என்ற காரணத்தைக் கூறி இக்குழுவைக் கலைத்திருப்பது ஏற்க முடியாதது. இரு அமைப்புகளின் நோக்கங்களும் முற்றிலும் வேறுபட்டவை.

மாநில உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படும் சூழலில் இக்குழுவைக் கலைத்தது கூட்டாட்சித் தத்துவத்திற்குப் பின்னடைவு. ஆட்சிகள் மாறலாம்; மாநில உரிமைகளைப் பாதுகாக்கும் கடமை மாறக்கூடாது.

எனவே, இக்குழுவைக் கலைத்த அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெற்று, எஞ்சிய ஆய்வுகளைத் தொடரவும், முதல் அறிக்கையின் பரிந்துரைகளைச் செயல்படுத்தவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.